நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.47/2021

அரசு தரப்புக்காக அ. சா.6 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பன்னீர்செல்வம் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 9 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.35)

நான் தற்போது காட்டுமன்னார் கோயில் தாலுக்கா சர்வராஜன்பேட்டையில் வசித்து வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.3 எழிலரசியை தெரியும் எங்கள் ஊரை சேர்ந்தவர். ஆஜர் எதிரியை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். (அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது) சுமார் 3 வருடங்களுக்கு முன்பு

காட்டுமன்னார்கோயில் காவல் நிலையத்திற்கு அருகில் எனது இருசக்கர வாகனம் மூலமாக சென்றபோது யாரோ ஒருவர் குத்திவிட்டதாக அங்கு கும்பலாக கூடியிருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது போலிசார் என்னை கையெழுத்து போடும்படி கேட்டார். நான் கையெழுத்து போட்டேன். அதில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் படித்து பார்க்கவில்லை. நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது ஆஜர் எதிரி அங்கு இருந்தாரா என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படம் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். (அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது). அந்த கையொப்பம் எதற்காக போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. காட்டுமன்னார்கோயில் காவல் நிலைய போலிசார் கையெழுத்து போடும்படி கேட்டார்கள். நான் அந்த கையெழுத்து போட்டேன். அதில் என்ன விவரம் எழுதியிருந்தது எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முழுமையாக ஆதரவு அளிக்காத நிலையில் ஏற்கனவே போலீசார் விசாரணையில் விசாரித்த போது கூறியிருப்பதை மறுத்துள்ள நிலையில் இந்த சாட்சியிடம் அரசு தரப்பு வழக்கை எடுத்துரைத்து மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய இந்திய சாட்சி சட்டப்பிரிவு 154ன் கீழ் அனுமதி கோரினார். இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154–ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை–</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அவ்வாறு விசாரித்தபோது நான் சர்வராஜன்பேட்டை கீழத்தெருவில் என் குடும்பத்துடன் வசித்து

வருகிறேன் என்றும் நான் விவசாய வேலை செய் செய்து வருகிறேன் என்றும் 05.07.2020 2020 ந் தேதி காலை 11.15 மணியளவில் நானும் எங்க தெருவை சேர்ந்த ரத்தினம் மகன் செல்வசேகர் என்பவரும் சொந்த வேலையாக காட்டுமன்னார்கோயில் பர்வதராஜ குருகுலம் மேல்நிலைப்பள்ளியின் அருகே சென்றபோது காட்டுமன்னார்கோயில் வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் ஒரு நபரை சுற்றி வளைத்து மடக்கி பிடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும் நாங்கள் என்னவென்று அருகில் சென்று பார்த்தபோது ஆய்வாளர் அவர்கள் அந்த நபரை சுட்டிக்காட்டி காட்டுமன்னார்கோயில் காவல் நிலைய குற்ற எண் 569/2020 பிரிவு 294(b), 324, 307 IPC–ன் படி வழக்கின் எதிரி எனக்கூறி கைது செய்தபோது எதிரியான ராஜேந்திரன் எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும், ஆசை வார்த்தைகளுமின்றி அதே இடத்தில் எதிரி தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்களை சாட்சியாக வைத்து எங்கள் முன்னிலையில் பதிவு செய்தும், பின்னர் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் பெரியார் நகர் வடக்கு, பாரதி வீதிக்கு சென்று எதிரியின் வீட்டு பின்புற காம்பவுன்டுக்கும் கிச்சனுக்கும் இடையில் கிச்சன் ஜன்னலின் வெளிப்புற ஓரத்தில் மறைத்து வைத்திருந்த எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய லேசான ரத்தக்கறையுடன் கூடிய ஸ்டீல் கத்தியை அடையாளம் காட்டி எதிரி எடுத்து ஆஜர் செய்ததை ஒரு கைப்பற்றுதல் மகசர் 12.30 மணிக்கு தயார் செய்து அதனை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரிலும் நானும் செல்வசேகரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் இது

சம்மந்தமாக காட்டுமன்னார்கோயில் வட்ட காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நடந்த விவரங்களை சொல்லிவிட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 11.47)

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.